

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.2.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோவை ஜி.கே.என்.எம். மருத்துவமனையின் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் வெளிநோயாளிகள் மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், சென்னையிலிருந்து கே.என்.சி.அறக்கட்டளையின் அறங்காவலர்கள் சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, டாக்டர் லலிதா தேவி சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, கோவையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி, கே.என்.சி.அறக்கட்டளையின் தலைவர் எஸ்.பதி, துணைத் தலைவர் ஆர்.கோபிநாத், ஜி.கே.என்.எம். மருத்துவமனை முதன்மை செயல் அலுவலர் டாக்டர் ரகுபதி வேலுசாமி மற்றும் மருத்துவமனை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மாணவர்களை தேர்வுக்கு ஆயத்தப்படுத்த வேண்டிய கடமை உள்ளதை கருத்தில் கொள்வீர்!

# பள்ளிக் குழந்தைகளின் கல்வியைக் கருத்தில் கொண்டு ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுவீர்!

## ஆசிரியர்களுக்கு - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வேண்டுகோள்!

சென்னை, பிப். 28 -

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு இருக்கும் ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டுள்ள அறிக்கையில், "பள்ளிக் குழந்தைகளின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு உடனடியாகப் பணிக்குத் திரும்பிடுவீர்!" என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு : -

சம வேலைக்கு சம ஊதியம் கேட்டு ஒரு வார காலமாக தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களின் நிலையை கருத்தில் கொண்டு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆசிரியர்களுக்கு விடுக்கும் அன்பான வேண்டுகோள்.

கடந்த ஒரு வார காலமாக தங்களின் கோரிக்கையினை நிறைவேற்றிட தொடர் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு வருகின்றீர்கள். பள்ளிகளில் தற்போது தேர்வு காலமாக இருப்பதனாலும் பெற்றோர்கள் தங்களின் குழந்தை களின் கல்வி பாதிக்கப்படுவதாக ஊடகங்களின் வழியாக கருத்துக்கள் தெரிவிப்பதனையும் கருத்தில் கொண்டு ஆர்ப்பாட்டத்தில் இருந்து விலகி தத்தமது பள்ளிகளுக்கு சென்று கல்விப் பணியாற்றிட வேண்டுமாய் இதன் மூலம் கேட்டுக் கொள்கின்றேன்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மனதில் ஆசிரியர்கள் என்றும் நீங்கா இடம் பெற்று இருப்பதால் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி வரும் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்காக ரூ.44,042/ கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட 50,000 ஆசிரியர்களின் இன்னல்களை தீர்க்கும் வகையில் நமது கழக அரசு கால முறை ஊதியத்தினை ஒரே நாளில் வழங்கி சிறப்பித்துள்ளது. மேலும், நமது கழக அரசு ஆசிரியர்களின் கோரிக்கைகளை பல்வேறு நிலையில் தீர்த்து வைத்து ஆசிரியர்களின் நலனுக்காக செயல்படும் அரசாக இருந்து வருகிறது.

தமிழ்நாடு அரசு இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கைகள் குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகள் அளிக்க மூவர் குழு ஒன்றை அமைத்து அரசாணை வெளியிட்டுள்ளது. இக்குழு ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மூன்று சுற்று கருத்து கேட்புக் கூட்டங்களை நடத்தியுள்ளது. மற்ற சங்கப் பிரதிநிதிகளுடன் அடுத்த சுற்று கருத்துக் கேட்பு நடைபெற வேண்டியுள்ளது. அதன் பின்னர் இப்பொருள் சார்ந்து விரிவான அறிக்கையினைப் பெற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுச் செல்லப்படும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்வியாண்டின் இறுதிநிலையில் இருப்பதால் மாணவர்கள் தேர்வுகளை எதிர்கொள் வதற்கு ஆயத்தப்படுத்த வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். கற்றல் - கற்பித்தல் மற்றும் தேர்வு பணியில் கவனம் செலுத்தி மாணவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக பணிபுரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆசிரியர்களாகிய நீங்கள் தான் குழந்தைகளின் இரண்டாவது பெற்றோர்கள் என்பதால் பள்ளிக் குழந்தைகளின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு ஆர்ப்பாட்டத்தினைக் கைவிட்டு உடனடியாக பணிக்குத் திரும்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# 111 'அ' வட்டக் கழகக் கூட்டம்!

## எப். பீட்டர்ஜான் வேண்டுகோள்!

சென்னை, பிப்.28-

கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 111அ வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (28.7.2024, புதன்கிழமை) மாலை 7 மணி அளவில் கம்மாளர் தெருவில் நடைபெறுகிறது என வட்டச் செயலாளர் பீட்டர் ஜான் தெரிவித்துள்ளார்.

கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை மற்றும் ஆயிரம் விளக்கு தேர்தல் பொறுப்பாளர் கலை கதிரவன் ஆகியோர் முன்னிலையில் வட்ட அவைத் தலைவர் ஆர்.லிங்கேசன் தலைமையில் வட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:. கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் 71-வது பிறந்தநாள் விழா

நாடாளுமன்றத் தேர்தல் , கழக ஆக்கப் பணிகள் குறித்து

இவ்வாறு வட்டச் செயலாளர் எப். பீட்டர்ஜான் தெரிவித்துள்ளார்.



ஆலந்தூர் தெற்கு பகுதி திமுக சார்பாக பாக முகவர்கள் பாக பொறுப்பாளர்கள் கூட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும் மண்டலக்குழுதலைவருமான என்.சந்திரன் தலைமையில் நங்கநல்லூரில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் குறு–சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான தா.மோ அன்பரசன் கலந்துகொண்டு நாடாளுமன்றத் தேர்தல் செயல்பாடுகள் குறித்து பேசினார்.இந்தக் கூட்டத்தில் திமுக அமைப்பு செயலாளர் ஆர் எஸ் பாரதி, தொகுதி தேர்தல் பொறுப்பாளர் நரேந்திரன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ் கே இப்ராகிம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், வட்ட செயலாளர் ஜே நடராஜன் மற்றும், மாவட்ட, வட்ட நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஒடுகத்தூர் ஆர். நடராசன்

### பிப்ரவரி 28 (2009)



கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்து கிளை, பேரூர், ஒன்றியம் ஆகிய அமைப்புகளின் செயலாளராக பொறுப்பேற்று கழகப் பணியாற்றிய இவர். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் செய்து கொண்டார்.

மூன்று முறை பொதுக்குழு உறுப்பினராகவும், ஒரு முறை மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

ஒடுகத்தூர் பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று 14 முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### இரயில் விபத்து ஏற்படாமல் தடுத்து நிறுத்திய - செங்கோட்டை வட்டம் -

# புளியரை கிராமத்தைச் சேர்ந்த தம்பதியருக்கு - முதல்வர் பாராட்டு!

## ரூ.5 இலட்சம் வெகுமதி வழங்கினார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.2.2024) தலைமைச் செயலகத்தில், தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்டம், புளியரை கிராமப் பகுதியில், 25–2–2024 அன்று நள்ளிரவு லாரி கவிழ்ந்து விபத்து ஏற்பட்டு செங்கோட்டை – கொல்லம் இரயில் மார்க்கத்திலுள்ள தண்டவாளத்தில் விழுந்ததடையடுத்து, செங்கோட்டையிலிருந்து புனலூர் நோக்கி வந்து கொண்டிருந்த இரயிலை அப்பகுதியில் வசித்து வந்த தம்பதியர் சண்முகையா –வடக்குத்தியாள் ஆகியோர் தண்டவாளத்தில் ஒடிச்சென்று டார்ச் லைட் ஒளியின் மூலம் இரயில் ஒட்டுநருக்கு சைகை காண்பித்து, இரயிலை நிறுத்தி ஏற்படவிருந்த பெரும் விபத்தை தடுத்து நிறுத்திய அத்தம்பதியரின் வீரதீர செயலை பாராட்டி, அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வெகுமதியாக வழங்கி, பாராட்டினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

சென்னை, பிப். 28-

இரயில் விபத்து ஏற்படாமல் தடுத்து நிறுத்திய தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்டம் புளியரை கிராமத்தைச் சேர்ந்த தம்பதியருக்கு முதலமைச்சர் அவர்கள் நேரில் அழைத்துப் பாராட்டுத் தெரிவித்துடன், அரசு சார்பில் ரூ.5 இலட்சம் வெகுமதி வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு:

தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்டம், புளியரை கிராமம், 'எஸ்'வளைவு என்ற தமிழ்நாடு கேரள எல்லைப் பகுதியில், 2522024 அன்று நள்ளிரவு 1.00 மணி அளவில் திருமங்கலம்கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் சென்ற லாரி ஒன்று நிலை தடுமாறி 40 அடி உயரத்திலிருந்து கவிழ்ந்து கீழே செல்லும் செங்கோட்டைகொல்லம் இரயில் மார்க்கத்திலுள்ள தண்டவாளத்தில் விழுந்து விபத்து ஏற்பட்டது.

அப்போது அப்பகுதியில் வசித்து வந்த தம்பதியர் சண்முகையா-திருமதி.வடக்குத்தியாள் தம்பதியினர் செங்கோட்டையிலிருந்து புனலூர் நோக்கி வந்து கொண்டிருந்த பகவதியம்மன் கோவில் திருவிழா சிறப்புப் பயணிகள் இரயில் வரும் சத்தத்தைக் கேட்டு நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து, தண்டவாளத்தில் சிறிது தூரம் ஓடிச்சென்று கையில் வைத்திருந்த டார்ச் லைட் ஒளியின் மூலம் இரயில் ஓட்டுநரிடம் சைகை காண்பித்து, இரயிலை நிறுத்தி ஏற்படவிருந்த பெரும் இரயில் விபத்தைத் தடுத்துள்ளனர். உடனடியாகத் தகவலறிந்து காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து பொதுமக்களுடன் இணைந்து தண்டவாளத்தில் விழுந்து கிடந்த லாரியினை அப்புறப்படுத்தியுள்ளனர். மேலும் சென்னையிலிருந்து கொல்லம் நோக்கிச் சென்ற விரைவு இரயிலும் செங்கோட்டை இரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது.

தங்களது முதிர்ந்த வயதையும், இருள் சூழ்ந்திருந்த நள்ளிரவு நேரத்தையும் பொருட்படுத்தாமல், பெரும் விபத்து நிகழ்வதைத் தடுத்து நிறுத்தும் ஒரே நோக்கத்துடன் தண்டவாளத்தில் ஓடிச்சென்று இரயிலை நிறுத்திய சண்முகையா - திருமதி. வடக்குத்தியாள் தம்பதியினரின் வீரதீரச் செயலை பாராட்டிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் வெகுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

### எம்.டி.ஆர். நாகராஜ் தலைமை! பொருளாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை!

# அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் கழகத் தலைவர் பிறந்தநாள் புகழரங்கம்!

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் - எம்.எச். ஜவாஹிருல்லா - பீட்டர் அல்போன்ஸ் சிறப்புரை!

சென்னை, பிப்.28

சென்னை கிழக்கு மாவட்டம்- அம்பத்தூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள், " மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா" புகழரங்கமாக நடைபெறுகிறது.

இன்று (28.2.2024-புதன்கிழமை) மாலை 6.00 மணி அளவில் கொரட்டூர் - ஸ்வாதி பேலஸில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு அம்பத்தூர் கிழக்குப் பகுதிச் செய லாளர் எம்.டி.ஆர். நாகராஜ் தலைமை வகிக்கிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., மண்டலக் குழுத் தலைவர் வழக்கறிஞர் பி.கே.மூர்த்தி, பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், கு.கிருஷ்ண மூர்த்தி, எல்.பி.எப் மோகன், து.ஆயிரம், டாக்டர் ஜி . சா ந் த கு மா ரி , ஜெ.பாலமுருகன், டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, ஜி.வி.நாகவள்ளி, து.ஜெகநாதன், பி.ஆர். இ ள ங் கே கா வ ன் , பா.பொற்செழியன், ரா.லட்சுமி ரங்கசாமி, இ. ராமு, சீ.லோகநாதன்,சு.மோகன்குமார், கு. சண்மு கம், ஆர்.சுந்தர்ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அம்பத்தூர் கிழக்குப் பகுதி மாவட்ட பிரதிநிதிகள் கே. செல்வம், கோ.முத்து குமாரசாமி, கோ.ராஜ்குமார், ந.குமரவடிவேல், ச.கோதண்டன், கோ.இன்பசேகரன், இ.நடராஜன், ஆர்.விமலன், ஜெ.ஐயப்பன், எஸ்.பரமசிவம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் சிறப்பு ரையாற்றுகின்றனர்.

மேயர் பிரியா ராஜன், கழக துணை அமைப்புச் செயலாளர் பா.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., அம்பத்தூர் தொகுதிப் பார்வையாளர் பி.டி.சி. செல்வராஜ் ஆகியோரும் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகின்றனர்.

வட்டச் செயலாளர்கள் மு.விஜயகுமார், த.வ.லாலீ ஆகியோர் நன்றி கூறுகின்ற னர்.

ப.ரங்கநாதன், சே.சந்துரு, கே.எஸ்.இரவிச்சந்திரன், சங்கரி நாராயணன், தமிழன் பிரசன்னா, எஸ்.மணிமுடி, கே. உமாகாந்த், .கே.எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார், என். பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதி இளம் சுருதி, ஆர்.வரதன், கோ. ஏகப்பன் தேவஜவகர், ஜி.எம். தேவன், புனிதவதி எத்திராசன், இசட் ஆசாத், கூ.பீ.ஜெயின், சரிதா மகேஷ்குமார், ஸ்ரீராமுலு, வே.வாசு, ஐ.சி.எப். வ.முரளிதரன், ஏ.நாகராஜன், சொ.வேலு, வி.சுதாகர், எம். சாமிக்கண்ணு, செ.தமிழ்வேந்தன், எஸ்.ராஜசேகர், எஸ். முரளி, கோ.மணி, எஸ்.பன்னீர் செல்வம், டி.வி.செம்மொழி பி.ஜெ.துளசிங்கம், பி.உதயசங்கர், சாவித்திரி வீரராகவன், எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி, சி.மகேஷ்குமார், டி.லோகேஷ், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜே.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, வானவில் விஜய், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், நா.துலுக்காணம், ஜி.தாமோதரன், துரை கண்ணன், எம்.பெரோஸ்கான், பி.விஜய குமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க.பா. பிரதீப் குமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், கா. ராஜ்முகமது. வே.ரவீந்திரன், பு.வீரா, வி.ராதாகிருஷ்ணன், மு.இரகு, டி . க ண் ண பி ர ா ன் , த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், நா.நெப்போலியன், இரா.டீக்கா உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயல்வீரர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் நடத்துவது குறித்தும் நாடாளுமன்ற தேர்தலில் பணியாற்றுவது குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில மாவட்ட நிர்வாகிகள் மாஸ்டர்.இ.குருதாஸ், டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், தொகுதி பார்வையாளர்கள் ராஜா குப்புசாமி, மனோகரன் , ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் டி.கிறிஸ்டி, .சிசு.ரவிச்சந்திரன், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், ஆர்த்தி ரவி, வி.வினோத்குமார், டி.ஆர்.கே.பாபு, பி.டி.சந்திரன், ஆர்.ஜெயசீலன், மற்றும் டி.மோதிலால் உள்பட பலர் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் இளமைக்கால நண்பர்

# வெங்கிடங்கால் சந்தானம் துணைவியார் திருமதி நீலாவதி அம்மையார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, பிப். 28-

முத்தமிழறிஞர்கலைஞர்அவர்களின்இளமைக்கால நண்பர் - வெங்கிடங்கால் சந்தானம் அவர்களின் துணைவியார்திருமதிநீலாவதிஅம்மையார்மறைவுற்ற செய்தியறிந்ததும்

"கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

'முத்தமிழறிஞர்தலைவர்கலைஞரின்இளமைக்கால நண்பரும், கீழ்வேளூர் ஒன்றியக் கழக முன்னாள் செயலாளரும், கீழ்வேளூர் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவருமான வெங்கிடங்கால் சந்தானம் அவர்களின் துணைவியார் திருமதி. ச.நீலாவதி அம்மையார் அவர்கள் மறைவுற்றார் என்பதை அறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

திருமதி. ச. நீலாவதி அம்மையார் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.'

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### கடலூர் கிழக்கு மாவட்டத்தில் தலைவர் பிறந்த நாள்

# 662 வார்டு, கிளைகளில் நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவிப்பு



மார்ச் 1 அன்று தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவையும் மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கையை விளக்கி பிரச்சாரமும், கழக அரசின் சாதனையை விளக்கி துண்டு பிரசுரம் வழங்கியும், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் ஒன்றிய பகுதிகளிலுள்ள 395 ஊராட்சிகளிலும், கடலூர் மாநகராட்சி 4 பகுதிகளிலுள்ள 45 வார்டுகளிலும், சிதம்பரம், வடலூர் நகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளிலும், 10 பேரூராட்சிகளில் உள்ள 162 வார்டுகளிலும், மொத்தம் 267 வார்டுகளிலும், ஆக மொத்தம் 662 இடங்களில் கழக கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி, அன்னதானம் வழங்கி, பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள், மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், மரக்கன்று நடுதல் மற்றும் ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாடிட வேண்டும்.

அதுசமயம், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்களும்கழக கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி, அன்னதானம் வழங்கி, பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள், மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், மரக்கன்று நடுதல் மற்றும் ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக.
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,